වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயல்திறன் அறிக்கை
Annual Performance Report

2022








කාර්මික අධ්‍යාපන හා පුහුණු කිරීමේ දෙපාර්තමේන්තුව
தொழில்நுட்பக் கல்வி, மற்றும் பயிற்சித் திணைக்களம்
Department of Technical Education & Training

DTET
SRI LANKA

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

செலவீனத் தலைப்பு இல. 215

உள்ளடக்கம் **பக்க இல.**

அத்தியாயம் 01- நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு 01 - 07

அத்தியாயம் 02- முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 08 - 12

அத்தியாயம் 03- 2022ம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை 13 - 28

அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள் 29

அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 30 - 31

அத்தியாயம் 06- மனிதவள விவரம் 32 - 33

அத்தியாயம் 07- இணக்க அறிக்கை 34 - 40

அத்தியாயம் 1

நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

இலங்கையில் தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சியானது, 1893ல் அரசாங்கத்தால் கொழும்பு, மருதானையில் புதுப்பிக்கப்பட்ட கோப்பி கடையில் நிறுவப்பட்ட முதலாவது தொழில்நுட்ப பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு 130 வருட சேவையில் காலடி வைத்துள்ளது. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், தொழில்நுட்பப் பாடசாலைகளின் நிறுவுகையுடன் உருவாக்கப்பட்டு இலங்கையின் கல்விச்சட்டத்தின் கீழ் இயங்கிவந்தநிலையில், 1994ல் தரம்-1 திணைக்களமாகத் தரமுயர்த்தப்பட்டது. தற்போது, இது திறன்கள் மேம்பாடு மற்றும் தொழிற்கல்வித்துறை, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவில் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகிறது. நாடளாவியரீதியில் 09 தொழிநுட்பவியல் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகள் கொண்ட வலையமைப்பானது, இளைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கி பல்வேறு தொழில் துறைகளில் வேலைக்கு அமர்த்துகிறது. தேசியதொழிற்தகுதிநிலை மற்றும் சான்றிதழ்நிலை கொண்ட 100க்கும் மேற்பட்ட கற்கைகள் 19 தொழில் துறைகளின் கீழ், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுகின்றன.

அனைத்துத் தொழில்நுட்பக்கல்லூரிகளும் தேசியதொழிற்தகுதி (NVQ) நிலை 3-4, மற்றும் தேசியதொழிற்தகுதியல்லாத (non-NVQ) அல்லாத கற்கைகளை நடத்துகின்றன. தகுதியுடைய மாணவர்கள், 9 மாகாணங்களிலுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் தேசியதொழிற்தகுதி நிலை 05 (டிப்ளோமா) மற்றும் 06(உயர்டிப்ளோமா)நிலைக் கற்கைகளைப் பின்பற்றலாம். நாட்டின் தொழிற் தேவைக்கேற்ப, வெவ்வேறு தேசியதொழிற்தகுதி நிலைகளின் தகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தேசியதொழிற்தகுதி செயல்முறையானது பயிலுனர்களுக்கு அவர்களின் திறன்களை கைவினைஞர் நிலைக்கு மேம்படுத்த உதவுகிறது.

டிப்ளோமா மற்றும் உயர்டிப்ளோமா பெற்றவர்கள் தேசியதொழிற்தகுதி மட்டம் 7ஐப் பின்பற்ற வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் (UNIVOTEC) நுழைய முடியும். இளங்கலைதொழில்நுட்பம் அல்லது இளங்கலைகல்வி தொழில்நுட்ப பட்டம் பெற மாணவர்களை இது அனுமதிக்கும்.

இத்திணைக்களமானது ஆட்டோமொபைல், பண்ணை இயந்திரம், உணவு தொழில்நுட்பம்- விசேடமாக சமையற்கலை மற்றும் பேஸ்ரி, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், இயந்திரவியல், குளிர்பதனம் மற்றும் வளிசீராக்கல், தொலைத்தொடர்பு, கட்டுமான தொழில்நுட்பம், வெல்டிங் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பம உள்ளிட்ட கற்கைகளை வழங்குகின்றது. இந்தக் கற்கைகள் தர உத்தரவாத அமைப்பின் கீழ் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மதிப்பீடுகள் மூலம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம் பெற்றவையாக உள்ளன. புதிய வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் அதிகரித்துவரும் தொழிற்றுறை சார்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நவீன தொழிநுட்பத்திற்கு பொருந்தக் கூடியவகையில் நடைமுறையிலிருக்கும் பாடத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் மறுபரிசீலனைப் படுத்தப்படுகின்றன.

130 வருடங்களில், தொழிநுட்பம் மற்றும் தொழிற்கல்வி முறையானது, மாற்றமடைந்து வரும் உலகளாவிய தொழிற்றுறைக்கேற்ப கணிசமான அளவில் மாற்றமடைந்துள்ளது. தேசிய மற்றும் சர்வதேச தொழிலாளர் சந்தைக்கு தேவைக்கேற்ற வகையில் மனிதவள அபிவிருத்தியை உறுதிப்படுத்தவும், அறிவுசார் பொருளாதாரம் கொண்ட உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கவும இத்திணைக்களமானது உறுதி பூண்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

சர்வதேசரீதியில் புகழ்பெற்ற, முன்னணி தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குநராக விளங்குதல்.

இலக்கு

தேசிய மற்றும் சர்வதேசரீதியில் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குநராக செயல்படுதல்

குறிக்கோள்கள்

- பாடசாலை விலகுவோர் மற்றும் பணியாளர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி வழங்குதல்
- தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக்கல்வி மூலம் பட்டப்படிப்பிற்கான பாதையை உருவாக்குதல்
- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மனித மூலதனத்தை வழங்குதல்
- சுயதொழில் மற்றும் தொழில் துறைக்கு வழிவகுக்கும் திறன்களை வழங்குதல்
- க.பொ.த.உயர்தர தொழில்நுட்பப்பிரிவு மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல்

1.3 செயல்பாடுகள்

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொடர்புடைய பயிற்சித் திட்டத்தைக் கண்டறிதல், தயாரித்தல், செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல், மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு.


- தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சியை அதிக உற்பத்தித்திறன் மற்றும் திறமையானதாக மாற்றுவதற்குத் தேவையான மனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி.

- தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஆராய்ச்சி நடத்துதல்.

- தொழில்நுட்பக் கல்வித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகுதி (ஏஞ) கட்டமைப்பின்படி கற்கைகளை செயல்படுத்துதல்.

- தொழில் வழிகாட்டுதல் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்திக்காக தனியார் மற்றும் பொதுத்துறையுடன் ஒருங்கிணைப்பு

1.4 திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

1. நிர்வாகப் பிரிவு
2. கல்விப் பிரிவு
3. பரீட்சித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
4. தொழில் வழிகாட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு
5. உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவு
6. பராமரிப்புப் பிரிவு
7. தகவல் தொகுதி முகாமைத்துவப் பிரிவு
8. திட்டமிடல் பிரிவு
9. தொழிநுட்பசார்பு சேவைகள் பிரிவு
10. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
11. நிதி முகாமைத்துவப் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழ்வரும் பயிற்சி மையங்கள் (இணைப்பு 1)

தொழில்நுட்பவியல் கல்லூரிகள் - 09

தொழில்நுட்பக் கல்லூரிகள் - 30

1.7 திணைக்களத்தின் கீழுள்ள நிதிகள்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களமானது தனது செயல்பாடுகளைச் செயல் படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு பல்வேறு மூலங்களிலிருந்து நிதியைப் பெற்றுள்ளது.

	நிதிமூலம்	நிதி ஒதுக்கீடு (ரூ.மில்)	பெறக்கூடிய நிதி (ரூ.மில்)	31.12.2022 அன்று செலவீனம்	முன்னேற்றம் (%)	
					நிதி	பௌதீக
திரட்டுநிதி						
1	மூலதனம்	310.00	110.00	34.504	32	85
2	மீண்டுவரும் செலவீனம்	2200.00	2267.00	2139.08	94	100
வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள்						
3	பௌதீக வளங்கள் அபிவிருத்திச்செயற்றிட்டம் (தொழிநுட்ப கல்லூரிகளின் மேம்படுத்தல்வேலைகளின் தொடர்ச்சியான செயற்றிட்டங்கள்)	34.36	34.36	25.101	75	100
4	வரவுசெலவுத்திட்டமுன்மொழிவுகளின் கீழ் டெக் உதான செயற்றிட்டம்	37.50	37.50	7.402	20	45
வெளிநாட்டு நிதிகள்						
5	தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டிடம் மற்றும் நிர்மாணப் பாடநெறிகளை வலுப்படுத்துவதற்கான முழுஜஊயு இன் மானிய நிதியுதவி	78.30	78.30	46.162	58	30
	மொத்தம்	2660.16	2527.16	2252.249		

1.7.1 வெளிநாட்டு நிதிமூலங்களிலான செயற்றிட்டங்கள்

இலங்கையில் உள்ள தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நிர்மாணப் பாடநெறிகளை வலுப்படுத்துவதற்கான KOICA மானிய நிதியுதவித்திட்டம்

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளித்தொழில்நுட்பக் கல்லூரிகளில் (2021-2024) கொரியன் சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவனம் முழுஐஊயு நிதியின் உதவியுடன் இரத்மலானை, மற்றும் மாத்தறை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், மருதானை மற்றும் இரத்தினபுரி தொழில்நுட்பவியல் கல்லூரிகளில், US$ 4.0 மில்லியன் மானியத் தொகையுடன் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சியில் (வுஏநுவு) கட்டிடம் மற்றும் நிர்மாணக்கற்கைகளை வலுப்படுத்துவதற்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இலங்கையின் நிர்மாணத் துறையில் திறமையான தொழிலாளர்களின் விகிதத்தை அதிகரித்துத் தேசியரீதியாகத் தேர்ந்த பணியாளர்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டம் KOICA இனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளித்தொழில்நுட்பக் கல்லூரிகளில மேற்கொள்ளப்பட்ட அமுலாக்கல் ஆய்வின் மூலம் செயல்படுத்த தொடங்கப்பட்டுள்ளது. திட்டத்தை செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல் பதிவு (RoD) KOICA மற்றும் இலங்கையின் தொடர்புடைய தரப்பினரால் கையெழுத்திடப்பட்டுள்ளது. இச் செயற்திட்ட நோக்கங்களை அடைய, பின்வரும் திட்டக் கூறுகளைச் செயல்படுத்த மேற்கூறிய தரப்பினர் செயற்படுகின்றனர்.

அ. கற்றல் கையேடு மேம்பாடு
ஆ. TVET பயிற்சியாளர் திறன் கட்டிடம்
இ. வேலைப்பயிற்சி (OJT) விருத்தி
ஈ. கற்றல் உபகரணங்கள் வழங்கல்
உ. வேலைப்பட்டறை புனரமைப்பு

கொரிய வல்லுனர்களால் கற்றல் கையேடு மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கற்கை தொடர்புடைய பயிற்றுனர்கள், கல்லூரித் தலைவர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கு இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டு தற்போதுள்ள பாடத்திட்டங்களில் திருத்தப்படவேண்டியவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கற்றல் கையேடு தயாரிக்கும் பணி கொரிய வல்லுனர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையின் கட்டுமாணத் துறைக்கு வேலைப்பயிற்சி (OJT) வியூகம் மற்றும் வேலைப்பயிற்சி (OJT) கலாச்சாரத்தை அறிமுகப்படுத்துமுகமாக கொரிய வேலைப்பயிற்சி (OJT) நிபுணர்களால் இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது, கட்டுமாணத் தொழில்கள், பயனாளிகள் கல்லூரிகளிலுள்ள பயிற்றுனர்கள் மற்றும் தொழில் வழிகாட்டுதல் அலுவலர்களிடமிருந்து இலக்குக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டன. மேலும் இருந்து. மேலும், பயனாளிகள் கல்லூரிகள், NAITA, VTA மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட குழுவில் உள்ள 20 பங்குபற்றுனருக்கு வேலைப்பயிற்சி (OJT)கலாச்சாரம் குறிதது 7 நாட்கள் கொண்ட பயிற்றுனர்களுக்கான பயிற்சி (ToT) நடைபெற்றது.

KOICA மற்றும் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, வேலைப்பட்டறை புனரமைப்பினை செயல்படுத்துவது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாத்தறை, இரத்தினபுரி மற்றும் இரத்மலானை திட்டங்களுக்கு தேசியரீதியாக பகிரங்க கேள்வி மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் மற்றும் மருதானை மறுவடிவமைப்புத் திட்டம் படைக் கணக்கியல் முறைகளின் கீழ் கடற்படையால் நடத்தப்பட்டது (பொருள் மட்டுமே வழங்கப்பட்டது). 4 கல்லூரிகளில் புனரமைப்புப் பணிகளுக்கு ரூ.205.037 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடாக அங்கீகரிக்கப்பட்டு நான்கு தளங்களிலும் புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டு சராசரியாக 30 சதவீத பணிகள் 31 டிசம்பர் 2022க்குள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் 31 மார்ச் 2023க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் 2022.12.31இல் உள்ளவாறான கொடுப்பனவுகளின் சுருக்கம்										
வாக்கு		கல்லூரியின் பெயர்	வேலையின் தன்மை	அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூபா)	ஒப்பந்தரீதியான ஒதுக்கீடு (ரூபா)	பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூபா)	பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (உள்நாட்டு நிதி) (ரூபா)	மொத்த செலவீனம் 2022.12.31 (ரூபா.)	நிதி ரீதியான முன்னேற்றம்	பௌதீக ரீதியான முன்னேற்றம்
KOICA மானிய செயற்றிட்டம்										
126-02-21-14-2401 (13)	1	தொழில்நுட்பக் கல்லூரி-இரத்மலானை	1 கணனி உதவி வடிவமைப்பு (CAD) மற்றும் கையால் வரைதல் (Manual Drawing), மற்றும் குழாய் பொருத்தல் (Plumbing) வேலைப்பட்டறை புனரமைப்பு	62,698,408.58	47,498,794.38	73,800,000.00		13,213,138.31	21%	க.உ.வ- 35சதவீதம் வரைதல்-33சதவீதம் குழாய்.பொ 32சதவீதம்
	2	தொழில்நுட்பக் கல்லூரி-மாத்தறை	2 கணனி உதவி வடிவமைப்பு (CAD) மற்றும் கையால் வரைதல் (Manual Drawing), மற்றும் குழாய் பொருத்தல் (Plumbing) வேலைப்பட்டறை புனரமைப்பு	46,620,034.56	35,318,208.00			9,648,962.40	21%	க.உ.வ- 33 சதவீதம் வரைதல்-30 சதவீதம் குழாய்.பொ-37 சதவீதம்
	3	தொழில்நுட்பவியல் கல்லூரி- இரத்தினபுரி	3 கணனி உதவி வடிவமைப்பு (CAD) மற்றும் கையால் வரைதல் (Manual Drawing), மற்றும் குழாய் பொருத்தல் (Plumbing) வேலைப்பட்டறை புனரமைப்பு	54,646,664.89	41,398,988.55		1,935,013.68	16,871,259.88	31%	க.உ.வ- 32 சதவீதம் வரைதல்-32 சதவீதம் குழாய்.பொ-36சதவீதம்
	4	தொழில்நுட்பவியல் கல்லூரி - மருதானை	4 கணனி உதவி வடிவமைப்பு (CAD) மற்றும் கையால் வரைதல் (Manual Drawing), மற்றும் குழாய் பொருத்தல் (Plumbing) வேலைப்பட்டறை புனரமைப்பு	25,105,283.81	25,105,283.81			7,242,385.67	29%	க.உ.வ- 39 சதவீதம் வரைதல்-22 சதவீதம்
			5 கணனி உதவி வடிவமைப்பு மற்றும் வரைதல் ஆய்வுகூடங்களுக்கான பொருள்வழங்கல், மரத்தளம் பொருத்தல் வேலைப்பட்டறை புனரமைப்பு	15,966,720.00	12,096,000.00			2,500,000.00	16%	39%
			மொத்தம்	205,037,111.84	161,417,274.74	73,800,000.00	1,935,013.68	49,475,746.26		

புனரமைப்புப்பணிகள் நிறைவடைந்த பின்னர், 2023-2024 ஆண்டுகாலப்பகுதியில் தொழிநுட்பத்துறையில் பயிற்சி வழங்குனருக்கான திறன்விருத்தி மற்றும் உபகரணங்கள் வழங்கல் ஆகியன நடைமுறைப்படுத்தப்படும்.

தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் அமைவிடங்கள்

மாகாணம்	அமைவிடம்
மேல்	இலங்கை தொழில்நுட்பவியல் கல்லூரி கொழும்பு (மருதானை)
	தொழில்நுட்பக் கல்லூரி - கம்பகா
	தொழில்நுட்பக் கல்லூரி - ஹோமாகம
	தொழில்நுட்பக் கல்லூரி - களுத்துறை
	தொழில்நுட்பக் கல்லூரி - இரத்மலானை
தென்	தொழில்நுட்பவியல் கல்லூரி - காலி
	தொழில்நுட்பக் கல்லூரி - பலப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - பெலியத்தை
	தொழில்நுட்பக் கல்லூரி - மாத்தறை
	தொழில்நுட்பக் கல்லூரி - வீரவில
சபரகமுவ	தொழில்நுட்பவியல் கல்லூரி - இரத்தினபுரி
	தொழில்நுட்பக் கல்லூரி - எம்பிலிப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - கேகாலை
	தொழில்நுட்பக் கல்லூரி - வரக்காபொலை
ஊவா	தொழில்நுட்பவியல் கல்லூரி -பதுளை
	தொழில்நுட்பக் கல்லூரி - பண்டாரவலை
	தொழில்நுட்பக் கல்லூரி - மெதகம
	தொழில்நுட்பக் கல்லூரி - மொனராகலை
கிழக்கு	தொழில்நுட்பவியல் கல்லூரி -அம்பாறை
	தொழில்நுட்பக் கல்லூரி - அக்கரைப்பற்று
	தொழில்நுட்பக் கல்லூரி - மட்டக்களப்பு
	தொழில்நுட்பக் கல்லூரி - தெகியத்தகண்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - சம்மாந்துறை
	தொழில்நுட்பக் கல்லூரி - திருகோணமலை
மத்திய	தொழில்நுட்பவியல் கல்லூரி - கண்டி
	தொழில்நுட்பக் கல்லூரி - தம்புள்ளை
	தொழில்நுட்பக் கல்லூரி - ஹசலக
	தொழில்நுட்பக் கல்லூரி - மாத்தளை
	தொழில்நுட்பக் கல்லூரி - நுவரெலியா
	தொழில்நுட்பக் கல்லூரி - பாததும்பரை
வடமத்திய	தொழில்நுட்பவியல் கல்லூரி - அநுராதபுரம்
	தொழில்நுட்பக் கல்லூரி - பொலனறுவை
வடமேல்	தொழில்நுட்பவியல் கல்லூரி - குருணாகலை
	தொழில்நுட்பக் கல்லூரி - ஆனமடுவை
	தொழில்நுட்பக் கல்லூரி - குளியாப்பிட்டிய
	தொழில்நுட்பக் கல்லூரி - வாரியப்பொல
வடக்கு	தொழில்நுட்பவியல் கல்லூரி - யாழ்ப்பாணம்
	தொழில்நுட்பக் கல்லூரி - வவுனியா
	தொழில்நுட்பக் கல்லூரி - மன்னார்



அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1. 2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

17 தொழில் துறைகளின் கீழ் 121 பாடப்பிரிவுகளுக்கு 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 31 டிசம்பர் 2022 அன்று 21,922 மாணவர்களின் சேர்க்கையுடன் முன்னைய ஆண்டுகளில் இருந்து 8,896 மாணவர்களுமாக மொத்தம் 31,577 மாணவர்கள் 2021 இல் பயிற்சி பெற்றுள்ளனர். சுமார் 41 சதவீத பெண் மாணவர்கள் 39 கல்லூரிகளில் தொழில்நுட்பக்கல்வியில் ஈடுபட்டுள்ளனர்.

இல	தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள தொழிற்றுறையின் பெயர்	2021 அனுமதி	முன்னைய ஆண்டுகளின் சேர்க்கை	13ம் வருட சேர்க்கை	வருட மொத்த சேர்க்கை
1	விவசாயத் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடைகள்	1896	865	33	2794
2	ஆட்டோமொபைல் பழுது மற்றும் பராமரிப்பு	3439	1314	418	5171
3	கட்டிடம் மற்றும் கட்டுமானம்	6075	3573	64	9712
4	மின்சாரம், மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு	2009	1270	52	3331
5	நிதி வங்கி மற்றும் முகாமைத்துவம்	1316	408		1724
6	உணவுத் தொழில்நுட்பம்	162	101		263
7	இரத்தினம் மற்றும் நகைத் தொழில்	30	11		41
8	ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை	258		8	266
9	தகவல் தொடர்பு மற்றும் பல்லூடகத் தொழில்நுட்பம்	2619	912	97	3628
10	மொழிகள்	1271	19		1290
11	தோல் மற்றும் காலணி	29	14		43
12	மெகாட்ரானிக் தொழில்நுட்பம்	240	292		532
13	உலோகம் மற்றும் இலகு பொறியியல்	849	86	70	1005
14	அலுவலக நிர்வாகம்	837		1	838
15	குளிர்பதனம் மற்றும் வளிச்சீராக்கம்	572	31	12	615
16	புடவைத் தொழில் மற்றும் தைத்தஆடைகள்	223		4	227
17	மரவேலைகள்	97			97
	nkhj;jk;	21922	8896	759	31577

- 2022 இல் நாட்டில் ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார நிலையற்றதன்மை காரணமாக், 2022 இல் கல்லூரிகளில் அதன் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை மாணவர்களைச் சேர்ப்பதில் குறைவு ஏற்பட்டது.

- 13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டத்தின் கீழ், கல்வி அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட 26 தொழிற்கல்வி பிரிவுகளின் கீழ் 30 பாடநெறிகளில் 29 கல்லூரிகளில் 759 மாணவர்கள் 03 கட்டங்களில் பதிவு செய்யப்படடுள்ளனர்.

- அனைத்து இனத்தவர்களுக்கும் பயிற்சி வாய்ப்புகளை எளிதாக்கும் வகையில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் (சிங்களம்-90, ஆங்கிலம்-59, தமிழ்-47) பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளன.

- 2022 ஆம் ஆண்டில், பற்றிக், பேக்கரி மற்றும் சமையல், தையல், விவசாயத்தொழில்நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம், செயலகப் பயிற்சி மற்றும் தட்டச்சு போன்ற பெண்கள்சார் கற்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

- தொழிற்பயிற்சி கல்வியில் பெண்களின் பிரதிநிதித்துவம் 41 சதவீதமாகவும், தையல், தோல் உற்பத்தி மற்றும் விவசாயக் கற்கைகளில் 80 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

- தேசிய தொழிற்பயிற்சி தகுதி (NVQ) பெறுவதற்கு பாடநெறிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. NVQ 3/4 மற்றும் NVQ 5/6 பாடநெறிகள் தொழில்துறை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் நடத்தப்பட்டு 8,698 NVQ 3/4 சான்றிதழ்கள் மற்றும் 2,173 NVQ 5/6 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 3,143 அல்லாத சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 2018/2019 கல்வியாண்டில் டிப்ளோமா படிப்புகள் (NVQ 5) மற்றும் உயர் டிப்ளமோ படிப்புகள் (NVQ 6) முடித்த 1,395 மாணவர்களுக்கு 11.03.2022 அன்று BMICH இல் நடைபெற்ற விழாவில் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், 2020/2021 ஆம் ஆண்டில் தகுதி பெற்ற 2,309 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்குவதற்காக இரண்டாவது டிப்ளோமா வழங்கும் விழா 22.11.2022 அன்று BMICH இல் நடைபெற்றது.

- 2022 ஆம் ஆண்டிற்கான ரூ.71.10 மில்லியன் பெறுமதியான "நிபுணதாத சிசு சவிய" புலமைப்பரிசிலகள் (ரூபா.4000 மாதாந்தம்) குறிப்பிட்ட தொழிற்கற்கைகளைப் பின்பற்றிய 17,770 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டு மாணவர் நலனுக்காக ரூ.1.9 மில்லியனும், புகையிரத பருவகாலச்சீட்டுக்களை வழங்குவதற்காக 33 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

- மாணிக்கம் மற்றும் ஆபரணக் கற்கைநெறியை மேம்படுத்துவதற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் 05 வருட காலத்திற்கு மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரியில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- திணைக்களத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளில், பேக்கரி மற்றும் சமையல் கற்கை- மேம்படுத்துவதற்காக, விரைவு சேவை குழுவினரை அறிமுகப்படுத்தும் வகையில் PIZZA HUT உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதற்கட்டமாக குளியாபிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில NVQ4 பாடநெறி பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

- Alumax நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அந்நிறுவனமானது, கம்பஹா, களுத்துறை, குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அலுமினிய சுத்திகரிப்பு பாடநெறிக்கான பயிற்சிப் பொருட்களை வழங்கியுள்ளன.

- வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு 2021, "டெக் உதானா" திட்டத்தின் கீழ், தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சித் திறனை அதிகபட்ச நிலைக்கு உயர்த்துவதற்காக, தனித்துவமான மற்றும் கவர்ச்சிகரமான கட்டடக்கலை வடிவமைப்பில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான் திட்டங்கள் தொடரப்படுகின்றன. தொழில்நுட்பக் கல்லூரிகளில் குருநாகல்-55 கண்டி-70, மருதானை--40, ஆகவும் ஹோமாகம -90, தம்புள்ளை -80, மாத்தறை -70, ஆகிய சதவீதங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து திட்டங்களுக்கும் பகுதி கொடுப்பனவுகள் செய்யப்பட்டு 2022 இல் நிறைவு செய்யப்படும்.

- வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ், குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாய உற்பத்திதொழில்நுட்பப் பாடநெறியைக் கற்கும் மாணவர்களுக்கு செய்முறைப்பயிற்சிச்சூழலை வழங்குவதற்கு நவீன விவசாயப்பண்ணை அலகு ஒன்று நிறுவப்பட்டது.

- குளியாபிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் தற்போதுள்ள பேக்கரி மற்றும் சமையல் கற்கை பாடநெறிக்காக ரூபா.5.4 மில்லியன் செலவில் முழு வசதிகளுடன் கூடிய பயிற்சி சமையலறை அலகு நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 115 மாணவர்கள் சமையற்கலைக்கற்கைக்கும், 60 மாணவர்கள் பேக்கரி பாடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இணையாக, விரைவு சேவை குழுவினரின் PIZZA HUT இன் உதவியுடன் NVQ4 பாடநெறி சனவரி 2023க்கு முன் ஆரம்பிக்கப்படும்.

- தொழிற்கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் தொடர்ச்சியான உபதிட்டங்களுக்கு ரூபா. 34.36 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதுடன் அனைத்து திட்டங்களும் மில்லியன் ரூபா.25.101ல் முடிக்கப்பட்டன.

- KOICA நிதியுதவியின் கீழ் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொறிமுறைவரைதிறன் (NVQ 4), வரைவு தொழினுட்பம் (NVQ 5) மற்றும் தொழில்துறை குழாய் பொருத்துதல் (NVQ 3/4) ஆகிய கற்கைகள் மருதானை, இரத்தினபுரி, தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் இரத்மலானை, மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தெரிவு செய்யப்பட்டன. தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கொரிய நிபுணர் திட்டக்குழுவின் உதவியுடன் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- KOICA மானியத் திட்டத்தின் கீழ், நான்கு பயனாளி கல்லூரிகளில் நிர்மாணத் துறை மேம்பாட்டிற்காக, தொடர்புடைய பயிற்றுவிப்பாளர்களுக்கான ஆரம்பப் பயிற்சித் திட்டங்கள் வரைவுத் திறன் (NVQ 4)> வரைவுத் தொழில்நுட்பம் (NVQ 5)> தொழில்துறை பிளம்பிங் (NVQ 3/4) ஆகியவற்றிற்கான கற்றல் கையேடு நடத்தப்பட்டன. அதே நேரத்தில், வேலைப்பயிற்சி (OJT) மூலோபாயத்தைத் தயாரித்தல் மற்றும் நிர்மாணத் துறைக்கான வேலைப்பயிற்சி (OJT) கலாச்சார மேம்பாடு குறித்து பயிற்றுனர்கள் மற்றும் தொழில் வழிகாட்டுதல் அதிகாரிகளுக்குக் கற்பிப்பதற்கான பட்டறைகள் நடத்தப்பட்டன.

- வரைவுத் திறன், வரைவுத் தொழில்நுட்பம், தொழில்துறை பிளம்பிங் ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்ட வேலைப்பட்டறைகள் நியமதர நிலைக்கு மாற்றியமைக்கப்படுவதுடன் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படும் இப்பணிகள் நடைமுறையில் முன்னேற்றத்தில் உள்ளன.

- தொழிற்பயிற்சித்திட்டங்கள் மற்றும் சுயவேலை வாய்ப்புகளை மேம்படுத்த தொழிநுட்பக்கல்லூரிகளில் 10,563 பங்கேற்பாளர்களுக்கு 224 விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை உடன் இணைந்து, மத்திய, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிநுட்பகல்லூரிகளில் எலக்ட்ரிக்கல், வெல்டிங் மற்றும் மெக்கானிக்கல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற 20 மாணவர்கள், சிங்கப்பூரில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகளால், சூம்

தொழில்நுட்பம் மூலம் சிங்கப்பூரில் வெளிநாட்டு வேலைகளுக்கு அனுப்பப்பட்டனர். இதன்மூலம் 14 மாணவர்கள் வேலைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

- தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மாணவர்களின் ஆட்சேர்ப்பை அதிகரிக்கும் நோக்கில் தொலைக்காட்சி, வானொலி, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக வளவாளர்களின் பங்களிப்புடன் தொழிற்கல்வியில் ஈடுபடுவதன் முக்கியத்துவம் குறித்து 7 விளம்பர நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

- SIYB (தங்கள் வணிகத்தைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல்) நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 10 நாள் நிகழ்நிலை செயலமர்வு ஆனது, தொழில்நுட்பக் கல்லூரிகளில் சம்பந்தப்பட்ட துறையில் பயின்ற பயிற்சியாளர்களுக்கான சுயவேலைவாய்ப்பு தேடும் சுயதொழில் பயனாளிகளுக்கு வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நடத்தப்பட்டது. வணிகத்தினைத் தொடங்குவதற்காக JICA மானியத் திட்டத்தின் கீழ் ரூபா.39.8 மில்லியன் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2.2 2023 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் எதிர்கால நோக்கு

- 2023 ஆம் ஆண்டிற்கு 09 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 30 தொழில்நுட்பக் கல்லூரிகளில் 18 வெவ்வேறு துறைகளின் கீழ் 119 பாடநெறிகளுக்கு 30000 மாணவர்களை உள்வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 39 கல்லூரிகளில் 38 NVQ 5/6 டிப்ளோமா கற்கைகள் மற்றும் 74 NVQ அல்லாத 3/4 கற்கைகள் உட்பட 900 கற்றற் திட்டங்களை நடாத்த எதிர்பார்க்கப்படுகிறது..

- 2023 ஆம் ஆண்டில் பயிற்சியை முடிக்கும் மாணவர்களுக்கு 12,700 திணைக்களச் சான்றிதழ்கள், 7400 NVQ 3/4 மற்றும் 1400 NVQ 5/6 சான்றிதழ்கள் உட்பட 21,500 சான்றிதழ்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- பேக்கரி மற்றும் சமையற்கலை, குழாய் பொருத்துதல் (பிளம்பிங்), இன்டஸ்ட்ரியல் மெகாட்ரானிக்ஸ், சைபர் செக்யூரிட்டி தொழிநுட்பம், மற்றும் கேஸ் மற்றும் ஆர்க் வெல்டிங் போன்ற கற்கைகள் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை தேவைகளின் அடிப்படையிலும், பெண்கள் பெருமளவில் ஈடுபடும் கற்கைகளான பற்றிக், தையல், விவசாய உற்பத்தி தொழில்நுட்பம், செயலக பயிற்சி, தகவல் பரிமாற்றல் தொழிநுட்பம், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆனவையும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

- 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட டெக் (தொழில்நுட்ப) உதான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், குருநாகல், கண்டி, மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் ஹோமாகம, தம்புள்ளை மற்றும் மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரிகள் தனித்துவமான கட்டடக்கலை வடிவமைப்பு 2023க்குள் அதிகபட்ச திறன் கொண்ட மாணவர்களைச் சேர்க்கும் முகமாக, எதிர்பார்க்கப்படும் வகையில் புனரமைப்பை நிறைவு செய்து மிகவும் கவர்ச்சிகரமான பயிற்சி மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

- KOICA மானிய உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணத் துறையின் திறன் மேம்பாடு, CAD ஆய்வகம், கையேடு வரைதல் ஆய்வகம், பிளம்பிங் பட்டறை ஆகியவை 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் முடிக்கப்படும் மற்றும் பயனாளிகள் கல்லூரிகளுக்கு கணினிகள்,

துணைக்கருவிகள் மற்றும் பட்டறை உபகரணங்கள் வழங்கப்படும். 2023. மறுவடிவமைக்கப்பட்ட பட்டறைகளில் உபகரணங்களை இயக்கிய பிறகு பயனாளி கல்லூரிகளில் பயிற்சியாளர்களுக்கு 02மாத பயிற்சியாளர் பயிற்சிகள் (TOT) நடத்தப்படும்.

- கட்டுமானத் துறையில் (டிரா.ப்ட்ஸ்மேன்ஷிப், டிராப்டிங் டெக்னாலஜி மற்றும் இன்டஸ்ட்ரியல் பிளம்பிங்) அடையாளம் காணப்பட்ட பாடநெறிகளுக்கான ஆசிரியர் கையேடுகள் தயாரித்தல் முடிக்கப்படும். மேலும், வேலை வாய்ப்பு பயிற்சி (முதுவு) திட்டங்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன், தொழில்துறைகளுடன் வேலை பயிற்சி உத்திகளின் வழிகாட்டுதல்களை உருவாக்க ஒருங்கிணைக்கப்படும் மற்றும் TVEC மற்றும; NAITA ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மாதிரி OJT திட்டம் செயல்படுத்தப்படும்.

- கொரிய உதவித் திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட வசதிகளின் கீழ் 04 பயனாளி கல்லூரிகளில் வரைவு தொழில்நுட்பம் (NVQ 5) பாடநெறிக்கு 100 மாணவர்களுக்கும், தொழில்துறை பிளம்பிங் தொழில்நுட்ப பாடநெறிக்கு (NVQ 4) 200 மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- Pizza Gama Lanka இன் நிதியுதவியின் கீழ், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் பாடநெறிகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் உபகரணங்களை நிறுவுவதற்கும் 10 கல்லூரிகள் அடையாளம் காணப்பட்டன. பேஸ்ட்ரி பேக்கரி மற்றும் குக்கரி படிப்புகள் தொடங்கப்பட்டு ஆண்டுதோறும் 1000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தின் கீழ் நுவரெலியா மற்றும் குளியாபிட்டிய கல்லூரிகளில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- ஜெர்மன் உதவியின் கீழ் GIZ திட்டத்தின் நிதியுதவியுடன், அடையாளம் காணப்பட்ட கல்லூரிகளில் 11 மின்பட்டறைகளை மேம்படுத்தவும் மற்றும் ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்காக, இலக்கு குழுக்களுக்கு கல்லூரிகளில் தொழிற்பயிற்சி திட்டங்களில் 1,536 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்ற TVET ஏஜென்சிகள் அல்லது தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும்

- YouLead இன் உதவியுடன் வேலையின் போது ஏற்படும் சிக்கல்களைக் குறைக்க வெளிநாடுகளுக்கு பாதுகாப்பான குடியேற்றத்தை எளிதாக்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் தகவல் மையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

- உயர் தொழிற்துறையை நோக்கி 5,900 மாணவர்களுக்கு NVQ 3/4 நிலை படிப்புகளான ஆட்டோ பெயிண்டிங், அலுமினியம் கட்டுருவாக்கம், ஆட்டோஏசி, சோலார் ∴போட்டோவோல்டாயிக் சிஸ்டம் டெக்னீசியன், வீட்டு மின்னியலாளர், பிளம்பிங், ஆட்டோ எலக்ட்ரீசியன், தாவர இழையவளர்ப்பு ஆய்வுகூட உதவியாளர் போன்ற கற்கைகள், மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய கல்லூரிகளில் பயிற்சி அளிக்க திட்டமிடப்படும்.

- ஆன்லைன் கல்வி முறையை வலுப்படுத்த, அனைத்து கல்லூரிகளையும் உள்ளடக்கும் வகையில் கற்றல் உதவிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இ-கற்றல் முறையை மேலும் பிரபலப்படுத்த, அனைத்து பாடத்திட்டங்களுக்கும் ஆன்லைன் கல்வி முறைக்கு ஏற்ற வகையில் கற்பித்தல் பொருட்களை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- கல்வி ஊழியர்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு வாகன தொழில்நுட்பம், குளிர்பதனம் மற்றும் ஏர் கண்டிசனிங், கட்டுமான தொழில்நுட்பம், மின்சாரம் மற்றும் மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், உலோக வேலை, மர வேலை, விவசாயம் போன்ற துறைகளில் இருந்து 135 ஆலோசகர்களை பணியமர்த்த மற்றும் 45 ஆர்ப்பாட்டக்காரர்கள் காலியிடங்கள் நிரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.3. தொழிற்கல்வியின் சவால்கள்

- சமூகப் பண்புகளின் காரணமாக வெல்டிங், மேசன்வேலை, மர வேலை போன்ற தொழிற்கல்விகளுக்கு மாணவர்களின் வருகை குறைவாகவிருத்தல்

- தொழிற்கற்கைகளுக்கான பெண் மாணவர்களின் பங்கேற்பு ஒப்பீட்டளவில் குறைவாகவிருத்தல்

- கடந்த ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நிலையற்ற தன்மை காரணமாக, இளைஞர்கள் தொழிற்கற்கைகளில் சேர்வதை விட உள்ளூர் (முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள்) மற்றும் வெளிநாட்டு திறமையற்ற வேலைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புகின்றனர்.


- பொருத்தமற்ற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறப்புத் தேவையுள்ள நபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கைகள் குறைவாகவிருத்தல்

- தேசிய நாட்காட்டியில் O/L மற்றும் A/L போன்ற தேசிய பரீட்சைகளின் மாற்றம், பாடநெறிக்கான மாணவர்களின் சேர்க்கையையும் பாதிக்கிறது. தொழிற்கல்வி சேர்க்கை மற்றும் தேசிய தேர்வுகள் பாடப்பிரிவுகளின் தேர்வை எளிதாக்கும் வகையில் காலவரையறையில் சீரமைக்கப்படவில்லை.

அத்தியாயம் 03

2022ம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று



ஏசீஏ- எப்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,126,600,000	1,920,750,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		122,458,485	263,046,547	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		49,035,304	50,910,534	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		2,298,093,789	2,234,707,081	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		2,298,093,789	2,234,707,081	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		22,389,241		
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		2,275,704,548	2,234,707,081	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-		
1,915,738,033.00	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,852,603,617	1,579,526,764	
268,927,033.00	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	234,139,453	195,286,927	ஏசீஏ-2(கை)
82,186,099.00	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	61,984,606	34,095,848	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-		
148,835.00	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	148,835		
2,267,000,000.00	மொத்த மீண்டுவரும் செலவினம் (C)		2,148,876,511	1,808,909,539	
	மூலதனம் செலவினம்				
68,000,000.00	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	26,480,478	99,843,846	
40,500,000.00	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	7,334,749	170,242,765	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(கை)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,500,000.00	திறன் விருத்தி	14	698,425	7,397,809	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
110,000,000.00	மொத்த மூலதனம் செலவினம் (எ)		34,513,652	277,484,420	
	வைப்புக் கொடுப்பனவுகள்		125,475,446	216,595,373	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		28,190,299	53,324,104	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		153,665,745	269,919,477	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		2,337,055,908	2,356,313,436	
2,377,000,000.00	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி x = (c-I)		(61,351,360)	(121,606,355)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(61,351,360)	(154,652,403)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
தி சொத்துக்கள் அற்றது			
தனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண	ஏசீஏ-6	8,526,577,933	8,488,861,066
தி சொத்துக்கள்			
ற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	94,489,556	113,827,039
சு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மாத்த சொத்துக்கள்		**8,621,067,489**	**8,602,688,105**
நிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
றைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(11,207,436)	5,113,086
தனம், பொறித் தொகுதி மற்றும் பகரண ஒதுக்கம்		8,526,577,933	8,488,861,066
டகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
டைமுறைப் பொறுப்புக்கள்			
வப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	105,696,992	105,696,993
னிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மாத்தப் பொறுப்புக்கள்		**8,621,067,489**	**8,599,671,145**

க இலக்கம் 07 முதல் 57 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் வல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 58 முதல் 96 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் ாள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் ப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. னால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய ாக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் ன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

M.N. Ranasinghe

நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி வாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை னத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் ற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

B.A.P.P. Chithrananda Bamunuarachchi
Chief Accountant
Department of Technical Education & Training
Olcott Mawatha, Colombo 10.

ானா கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
வி :	பதவி :	பெயர் :
தி: 2023. 02.10	திகதி : 2023. 02.08	திகதி : 2023. 02 07

S.C. Jagath
Director General
Department of Technical Education & Training
P.O. Box : 557, Olcott Mawatha, Colombo 10.

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022	2021
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்	133,190,187	123,257,357
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்		
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	2,126,600,000	1,920,750,000
முற்பணங்களை அறவிடல்	50,651,499	52,018,908
வைப்புக்களின் பெறுகை	122,458,485	263,046,547
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,432,900,171**	**2,359,072,812**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	2,075,363,757	1,774,167,996
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	62,133,441	34,095,848
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	85,039,424	3,638,532
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	22,389,241	-
முற்பணக் கொடுப்பனவு	27,985,210	53,090,642
வைப்புக் கொடுப்பனவு	125,475,446	216,595,373
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,398,386,519**	**2,081,588,391**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**34,513,652**	**277,484,421**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	34,513,652	277,484,421
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**34,513,652**	**277,484,421**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(34,513,652)**	**(277,484,421)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பிற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
தனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
ம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

ஒரு அறிக்கையிடல் நிறுவனத்தில் குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் பொது கணக்கு துறையின் ஒப்புதலுடன் நிதிநிலை அறிக்கைகளில் தகவல் சேர்க்கப்படலாம். மேலும் அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுதல் அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் சேர்க்கப்படலாம்

அதன் அறிக்கையிடல் நிறுவனத்துடன் தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே அறிக்கையிடல் அடிப்படையில் வெளியிடப்பட வேண்டும்

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

பொருத்தமற்றது

3.6 ஒதுக்கீடுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

வாக்கு விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு 2021 (ரூ. மில்)	கிடைக்கக்கூடிய ஒதுக்கீடு (ரூ. மில்)	செலவு 31.12.2021 (ரூ. மில்)	நிதி முன்னேற்றம் –சதவீதம்	பௌதீக முன்னேற்றம் –சதவீதம்
மூலதனம்	310.00	110.00	34.504	31%	80%
கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	205.00	55.50	19.373	34%	85%
தொழிற்கூட இயந்திரம் மற்றும் உபகரணங்கள்	67.00	30.00	6.611	22%	70%
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணம்	13.50	9.00	0.625	0.65%	55%
தொழிற்கூடதடுப்பு பராமரிப்பு, இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	15.00	8.00	5.766	72%	80%
வாகனங்களுக்கான தடுப்பு பராமரிப்புசேவைகள்	7.00	6.00	1.432	23%	70%
மனித வளம் மற்றும் அபிவிருத்தி	2.50	1.50	0.697	46%	75%
மீண்டெழும் செலவினம்	2200.00	2267.00	2139.09	97%	100%

3.7. மற்ற திணைக்களங்களின் முகவராக இந்தத் திணைக்களத்திற்கான நி. பி. 208 இன் படியான செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள்.

திணைக்கள தலைப்பு	கணக் கிடல்	கணக்கு இல	ரூபா பெறுமதி	நிறுவனம்	குறிப்பு
215	306	1003	783,085.00	புகையிரதத் திணைக்களம்	புகையிரத ஆணைச்சீட்டு
215	306	1003	1,400,560.00	புகையிரதத் திணைக்களம்	புகையிரத ஆணைச்சீட்டு
215	306	1003	909,980.00	புகையிரதத் திணைக்களம்	புகையிரத ஆணைச்சீட்டு
215	211	1201	414,720.00	அச்சிடல் திணைக்களம்	மாணவர்அடையாள அட்டை அச்சிடல்
215	641	1404	7,870,968.00	சுங்கத் திணைக்களம்	அனுமதிக்கட்டணம்
			11,379,313.00		

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையின் செயல்திறன்

சொத்து இல.	சொத்து இல.ற்கான விளக்கம்	2022.12.31 இல் கணக்கெடுப்பு மீதி (ரூபா)	2022.12.31 இல் நிதிநிலைமைக்கூற்று அறிக்கை மீதி (ரூபா)	கணக்கில் வராதவை	ஆறிக்கை முன்னேற்றம்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	2,540,819,569.10	2,540,819,569.10		*
9152	தொழிற்கூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	1,341,258,909.76	1,341,258,909.76		98%
9153	நிலம்	4,308,992,250.00	4,308,992,250.00		*
9154	அசையா சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	முன்னேற்றத்திலுள்ள வேலைகள்	335,507,204.44	335,507,204.44		**
9180	குத்தகை சொத்துக்கள்				

* தெளிவான உரிமையில்லாத நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டு, அதன்பிறகு மூலதனமாக்கப்பட்டு கணக்கு வைக்கப்படும்.

** ஆனமடுவ கல்லூரியின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த பின்னர் சொத்துக்கள் மூலதனமாக்கப்படும்.

3.9 fzf;fha;thsu; jiyik mjpgjpapd; mwpf;if

VOT/E/DTET/2022/FA/33 2023 மே 25

கணக்கீட்டு உத்தியோகத்தர்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டபிள்யூ. ஆனந்த

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

பிரதிகள்:

செயலாளர் கல்வித் திணைக்களம்

பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்

கணக்கீட்டு உத்தியோகத்தர்,
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தலைப்பு 215 - தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை

தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது என்பது,

(ஆ) 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக, முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியேற்பாடுகள் எஞ்சுதல்

(i) 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் மூலம் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன்,

மதிப்பீடுகளை நிதியேற்பாட்டுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு நூறு சதவீதம் நிதியேற்பாடு எஞ்சிய 3 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதன் பெறுமதி ரூபா 21,500,000 ஆகும்.

(ii) மேற்படி சுற்றறிக்கைக்கு இணங்கிய வகையில் திணைக்களத்தினால் 50 சதவீதமான நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்த 22 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடள், நிதியேற்பாட்டிலான சேமிப்பு ரூபா 81,281,556 ஆகும்.

(ஆ) உரிய கற்கையொன்றினை மேற்கொள்ளாது, மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் 19 செலவின விடயங்களிலிருந்து ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 92,287,287 ஆன நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன், இவ்வாறு நிதியேற்பாடு மாற்றப்படாவிடின்ஆரம்ப மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டுடன் ஒப்பிடும் போது குறித்த செலவின விடயங்களின் சேமிப்பு 4 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினுள் காணப்பட்டது.

2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்படும் 29 செலவின விடயங்களின் மீதிகள் SA 92 திறைசேரியின் கணினி அச்சீட்டுப் பதிவில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 882 முதல் ரூபா 32,943,562 வரையான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஆ) NVQ சான்றிதழ்களை அச்சிடுவதற்காக 2022 ஏப்ரல் 02 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 22 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூபா 4,027,000 ஆன தொகை பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் திணைக்களத்தின் கணக்கிற்கு வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த காசோலைகளின் பெறுமதியான ரூபா 1,051,868 தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கணக்கிற்கு உரியதாக வழங்கப்பட்ட 06 மாதங்களைக் கடந்த கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2017 ஆம் ஆண்டு முதல் ரூபா 1,036,913 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) 03 தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் கைத்தொழில் கல்லூரிகளின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வங்கி இணக்கக்கூற்றுக்களின் இனங்காணப்படாத பெறுவனவுகளாக 2021 ஆகஸ்ட் முதல் 2022 திசெம்பர் மாதம் வரையிலும் கிடைத்த ரூபா 55,000 பெறுமதியான பெறுவனவு சந்தர்ப்பங்கள் 04 இனை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 வைப்புக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படும் 03 வைப்புக் கணக்குகளின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 2 வருடங்களை கடந்த ரூபா 21,513,909 ஆன வைப்புக்கள் தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3 தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வுச் சபை அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டிருந்த கைத்தவிர்க்கப்பட வேண்டிய சொத்து வகைகள் 2922 மற்றும் விற்பனைக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த 5432 சொத்து வகைகளின் பெறுமதிகள் இனங்காணப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டுக்கு முன்னைய ஆண்டுகள் முதல் பொருள் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைகளில் சிற்சில சொத்துக்களை விற்பனை செய்தல், ஏலமிடுதல், அழித்தல் ஆகியவற்றுக்காக வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது அவ்வாறு அகற்றப்பட்ட பொருட்களின் கிரயப் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்று நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படாத நிலை காணப்பட்டது.

(இ) தலைமை அலுவலகம் மற்றும் 39 கல்லூரிகள் எனும் 40 நிறுவனங்களில் 16 நிறுவனங்கள் மாத்திரம் காணிகளின் பெறுமதி ரூபா 4,308,992,250 ஆக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய 24 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 23 தொழில்நுட்ப கைத்தொழில்களுக்குரிய 287 கட்டிடங்களின் பெறுமதி சொத்துக்கள் பதிவேட்டினுள் உள்ளடக்கப்படாத காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதியின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

3.2 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881(i) இன் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மற்றும் தொழில்நுட்ப / கைத்தொழில் கல்லூரிகளில் பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் அந்த பதவிகளில் நியமிக்கப்பட்ட திகதி முதல் 2 மாதங்களினுள் பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், எந்தவொரு உத்தியோகத்தரும் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 4,438,909 தொகையான புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படாத அழிவுகள் மற்றும் நட்டங்களின் பெறுமதியொன்று 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முன்கொண்டு செல்லப்பட்டவாறு காணப்பட்டது.

(ஆ) 2021 செப்தம்பர் 27 ஆந் திகதி அம்பாறை ஹாட் தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் நிறுவனத்திற்கு சொந்தமான வேன் வண்டியொன்றை ஓட்டிக்கொண்டிருந்த போது அவசர விபத்திற்குள்ளானார். இந்த உத்தியோகத்தரின் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய ஓட்ட முடியாத வாகனமொன்றை ஓட்டுவதற்கு அனுமதி வழங்குதல், அந்த வாகனம் முழுமையான காப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிராமை மற்றும் உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்கு நிரந்தர சாரதியொருவர் வழங்கப்படாமை ஆகிய விடயங்கள் இதன் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் நிர்வாகம் தமது பணிப்பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றியிராத காரணத்தால் நி.பி. 105 – (1)(ஈ) இன் பிரகாரம், இந்த விபத்தினால் அண்ணளவாக மதிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,047,899 ஆன நட்டத்தினை தீர்ப்பனவு செய்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்படும் வாய்ப்புகள் காணப்படுவதுடன், இரண்டாவது தடவையாகவும் விசாரணைச் சபையொன்று நியமிக்கப்பட்டு, ஆரம்ப அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த அறவிடப்பட வேண்டிய தொகையில் 50 சதவீதத்தினை மாத்திரம் அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட காரணத்தால், நட்டத்தை தீர்ப்பதற்கு இயலுமானதாக காணப்பட்ட பெறுமதி ரூபா 196,482 இனால் குறைவடைந்திருந்தது.

(ii) அம்பாறை ஹாட் தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரின் ஓய்வூதிய பணிக்கொடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், பரிந்துரைக்கப்பட்ட நட்டமான ரூபா 327,468 ஆன தொகையை அறவிட்டு, எஞ்சிய தொகையை விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் அதனை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு 2023 ஆம் ஆண்டு வரையிலும் தாமதிக்கப்பட்டிருந்தது.

(iii) அவ்வாறே, அறவிடப்படாத பெறுமதிக்காக உரிய நடவடிக்கை எடுக்காது ரூபா 1,000,000 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பதிவழிக்கப்படாது அழிவு நட்டமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் TITP கட்டிடத்தின் இரண்டாம் தளத்தின் விரிவுரை மண்டப இலக்கம் 07 விரிவுரைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பல வருடங்களாக விரிவுரை மண்டபமாக பயன்படுத்தும் நோக்கத்திலிருந்து விலகி நிர்வாகப் பிரிவின் களஞ்சியமொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் அலுவலகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள சுமார் 400 சதுர அடிகள் பரப்பளவான 20 ஆம் இலக்க அறை, 50 சதுர அடிகள் பரப்பளவுடைய 07 தடுப்பு அறைகள் (Cabin) இந்தப் பணியிலும் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் TITP கட்டிடத்தின் இரண்டாம் தளத்தின் விரிவுரை மண்டப இலக்கம் 07 அறையானது அண்ணளவாக 60 சதுர அடிகளைக் கொண்ட D 5 இறையினுள்

பயன்படுத்தக்கூடிய தரத்திலான பாத்திரங்கள், தட்டுகள், இலத்திரணியல் உபகரணங்கள, பழைய தொலைக்காட்சிப் பெட்டியொன்று, உடைந்த கதிரைகள், போட்டோ பிரதி இயந்திரமொன்று, கபட், புரொஜெக்டர்கள், சாவிகள், யன்னல் பொருத்திகள், வாயுத் தாங்கியொன்று மற்றும் ஏணியொன்று உள்ளடங்களான பெரும்பாலான பொருட்கள் ஒழுக்கற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) திணைக்கள வளாகத்தில் பிரதான கட்டிடத்திலிருந்து TITP கட்டிடத்திற்கு பிரவேசிக்கும் படிக்கட்டின் அண்மையில் மேல் தளத்தில் TITP கட்டிடத்தின் வலது புறத்திலுள்ள மின்தூக்கியின் அருகாமையில் பல்வேறு இடங்களில் மழை நீர் கசிவடைவதால், மழையுடனான நாட்களில் அந்த இடத்தில் நீர் கசிவுகள் காணப்படுவதுடன், அந்த இடங்கள் நிறம் மங்கிக் காணப்பட்ட போதிலும், அதனை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஓய்வூதியக் கோவையின் 2-14 பரிவுக்கமைய உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வுபெற்றுச் செல்லும் போது ஓய்வூதிய விண்ணப்பப்படிவம் குறித்த உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு திட்டமிட்டுள்ள திகதியிலிருந்து 03 மாத காலத்திற்கு முன்னர் ஓய்வூதிய திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்றுச் சென்ற சுமார் 20 உத்தியோகத்தர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் கருத்திற்கொள்வதற்காக குறித்த ஓய்வூதிய விண்ணப்பங்கள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் போது 2 முதல் 10 மாதங்களுக்கு இடைப்பட்ட கால தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2022 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற NVQ Level 05 – December 2021 (April/May 2022) (Semester 1) – Diploma in Food Technology பாடநெறிக்குரிய எழுத்துமூலப் பரீட்சைக்கு 90 மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு பாடத்திற்குரிய வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வினாக்களும் ஆகும். பின்னர் சரியான வினாத்தாளாக பரீட்சைகள் பிரிவினால் மின்னஞ்சல் (Email) மூலம் துரிதமாக பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, தாமத காலம் நிறைவு செய்யப்பட்டு விடைத்தாள்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களை அங்கீகரிக்கும் போது மீள் பரிசோதனையொன்று இடம்பெறுவதில்லை என்பதால் மேற்படி நிலைமைகள் ஏற்படக்கூடும் என்பதும், சர்வதேச ரீதியில் உயரிய அங்கீகாரமுடைய தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடியாக திகழ்தல் எனும் நோக்குடன் செயற்படும் இந்த திணைக்களத்தினுள் பாடநெறிகளுக்காக பரீட்சைகளை நடாத்துதல் வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் உயர் தரத்துடனான மேற்கொள்ளல் அத்தியாவசியமானது ஆன போதிலும், இவ்வாறான நிகழ்வுகளின் ஊடாக பரீட்சைகள் முறைமையின் இரகசியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு உச்ச அளவில் சேதம் ஏற்படுகின்ற நிலையொன்று காணப்பட்டது.

(ஊ) திணைக்கத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றல் கொள்கைகள் 04 காணப்படுவதுடன், அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால் 91 உத்தியோகத்தர்கள் திணைக்கத்தினுள் பல வருடங்களாக ஒரே இடத்தில் தேங்கியுள்ள நிலைமையொன்று காணப்பட்டது.

(எ) திணைக்களத்தில் காணப்பட்ட ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணமடைந்த, ஓய்வுபெற்றுச்சென்ற, பணி வறிதாக்கப்பட்ட, சேவையை விட்டுச்சென்ற, சேவையை முடிவுறுத்திய 59 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,595,847 தொகையான கடன் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. மனிதவள முகாமைத்துவம்

4.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி

இலங்கை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் அதன் கீழ் செயற்படும் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கைத்தொழில் கல்லூரிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக உள்ளபடியாக பதவியணியினை பரிசோதித்த போது 51 பதவிகளின் 1599 வெற்றிடங்களும், இரு பதவிகளின் 42 மிகைகளும் காணப்பட்டன.

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

ml;ltiz 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

விசேட குறிகாட்டி	குறிகாட்டிகளின் கணிப்பீடு	எதிர்பார்க்கப்படும் வெளியீட்டின் சதவீதம் சார்பாக உண்மையான வெளியீடு (%)			
		(100-90)	(75-89)	(50-74)	குறிப்புக்கள்
1) பாடநெறி நிறைவு சதவீதம்	மாணவர் பாடநெறியை நிறைவு செய்தல் x 100 பாடநெறிக்குச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கை		√		
2) திறன் பயன்பாட்டு சதவீதம்	சரியான மாணவர் எண்ணிக்கை x 100 மாணவர் பயிற்சிக்கான கொள்ளளவு		√		
3) சேர்க்கை (உட்கொள்ளல்) சதவீதம்	சேர்ந்த மாணவர் எண்ணிக்கை x 100 விண்ணப்பங்களின் எண்ணிக்கை		√		விண்ணப்பங்களிலிருந்து 75 சதவீத சேர்க்கை
4) பயிற்சியாளருக்கான செலவு (ரூபா)	ஆண்டுக்கான மொத்தமாக செலவான மீண்டெழும் செலவு ஆண்டுக்கான மொத்த மாணவர் எண்ணிக்கை		√ (ரூ67626.22)		
5) வேலை வாய்ப்பு சதவீதம்	தொழில் கிடைத்த எண்ணிக்கை x 100 சித்தியடைந்த எண்ணிக்கை			√	
6) மொத்த செலவில் சுய-உருவாக்கப்பட்ட நிதிகள்	மாணவரிடமிருந்து கிடைத்த பாடநெறிக் கட்டணம் x 100 ஆண்டுக்கான மொத்த செலவு				3 சதவீதம்
7) விரிவுரையாளர் திறன் அடிப்படையிலான கிடைக்கும் தன்மை	விரிவுரையாளர் கிடைக்கப்பெறுதன்மை x 100 தேவையான விரிவுரையாளர்கள் தொகை				43 சதவீதம்
8) அனுமதியளிக்கப்பட்ட ஆளணி அடிப்படையில் விரிவுரையாளர் திறன்	விரிவுரையாளர் கிடைக்கப்பெறுதன்மை x 100 அனுமதியளிக்கப்பட்ட ஆளணி				46 சதவீதம்

அத்தியாயம் 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை (SDG)

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

நோக்க குறிக்கோள்	இலக்குகள்		சாதனைகளின் குறிக்கோள்கள்	இன்றுவரையான சாதனையின் முன்னேற்றம்		
				0 - 49%	50 - 74%	75 -100%
4. தரமான கல்வி: யாவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல்.	இலக்கு 4.3: 2030க்குள், அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருளாதாச் சிக்கன மற்றும் தரத்தில் சமமான அணுகலை பல்கலைக்கழகம் உட்பட தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் மூன்றாம் நிலை கல்வியை உறுதி செய்தல்	4.3.1 கடந்த 12 மாதங்களில் முறையான மற்றும் முறைசாரா கல்வி மற்றும் பயிற்சியில் இளைஞர்கள் மற்றும் வளர்ந்தவர்களின் பங்கேற்பு விகிதம்.	ஆண்டுதோறும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை			√ பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து 75 சதவீத சேர்க்கை
	இலக்கு 4.4: 2030க்குள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்திறன்கள் ஆகியவற்றைக் கொண்ட தேவையான திறன்கள கொண்ட,இளைஞர்கள் மற்றும் வயதுவந்தோரின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு, ஒழுக்கமான வேலைகள் மற்றும் தொழில்முனைவு என்பவற்றில் கணிசமாக அதிகரித்தல்	4.4.1 திறன் வகையின் அடிப்படையில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) திறன் கொண்ட இளைஞர்கள் மற்றும் வளர்ந்தவர்களின் விகிதம்	திறன்விருத்தி பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	√		
	இலக்கு 4.உ: 2030க்குள், குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் சிறிய தீவு வளரும் நாடுகளில் உள்ள தகுதியான ஆசிரியர்களின் எண்ணிக்கையை, சர்வதேச ஒத்துழைப்பு மூலம் குறிப்பாக வளரும் நாடுகளில் ஆசிரியர் பயிற்சி மூலமாக கணிசமாக அதிகரித்தல்	4.சி..1 ஆசிரியர்களின் விகிதம்: முன்பள்ளி (அ) ஆரம்பநிலை (ஆ) கீழ்-இரண்டாம் நிலை மற்றும் (இ) மேல்--இரண்டாம்நிலைக் கல்வியில் குறைந்தபட்சம் ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக்கு முந்தைய சேவை அல்லது கற்பித்தலுக்குத் தேவையான சேவையைப் பெற்றவர்கள் கொடுக்கப்பட்ட நாட்டில் தொடர்புடைய நிலை	கற்கைகளில் சேரும் பெண் மாணவர்களின் எண்ணிக்கை	√ 45 சதவீத பெண் மாணவர்கள் அனுமதி		
	இலக்கு 4.5: 2030க்குள், அனைத்து நிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சியை, குறைபாடுகள், பழங்குடி மக்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகள் ஆகியோருக்கு கல்வியில் பாலின வேறுபாடுகளை நீக்கி, சமமான அணுகலை உறுதிசெய்தல்	4.5.1 இந்தப் பட்டியலில் உள்ள அனைத்துக் கல்விக் குறிகாட்டிகளுக்குப் பகுதி குறியீடுகள் (பெண்கள்-ஆண்கள், கிராமப்புறம்-நகர்ப்புறம், கீழ்-மேல், செல்வம் மற்றும் பிற ஊனமுற்றோர் நிலை பழங்குடி மக்கள் மற்றும் மோதல் - பாதிப்பு போன்றவை).	• TVET படிப்புகளில் சேருவதற்கு சம வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை. • மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான வசதிகள் உள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை • பொருளாதார ரீதியாக ஆரோக்கியமற்ற குடும்பங்களுக்கு மாணவர்களின் உதவித்தொகை மற்றும் சலுகைகள்		√	

5.1.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றும் சவால்கள்

சாதனைகள்

- வருடாந்த மாணவர் சேர்க்கையை அதிகரிக்கத் தேவையான பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கு வரவு செலவுத்திட்டம் 2022 மூலம் ஒதுக்கீட்டைப் பெறல்
- சமூக நிலையற்ற தன்மை மற்றும் பொருளாதார நெருக்கடியின் சவால்களை எதிர்கொள்ள நிகழ்நிலை மற்றும் கலப்பு முறையில் கற்கைகளை நடாத்துதல்.
- அடையாளம் காணப்பட்ட தொழிற்கற்கைகளில் உள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தை வழங்குதல் மற்றும் துணை நலன்புரி வசதிகளாக சலுகை பருவகாலசீட்டுக்களை வழங்குதல்.
- 2022 ஆம் ஆண்டில் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மேற்பார்வை நிலைப் பணிகளுக்குத் தகுதி பெற்ற 3800 மாணவர்களுக்கு டிப்ளோமா 5 மற்றும் 6 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- கற்கைகளை மேம்படுத்த பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து (KOICA, USAID, JICA) வெளிநாட்டு நிதி உதவிக்ள கிடைக்கப்பெறல்.
- ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை, அலுமினியம் பப்ரிகேஷன் துறை தொடர்பான பாடத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக தொடக்கமாக தனியார் துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்.
- பாடத்திட்டத்தை மேம்படுத்த மற்றும் திறமையான OJT பயிற்சி முன்னேற்றத்திற்காக OJT கலாச்சாரத்தை அறிமுகப்படுத்துதல்.

சவால்கள்

- மூன்றாம் நிலை தொழிற்தகுதி மற்றும் பயிற்சிக் கற்கைகளில் பெண் மாணவர்களின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது.
- விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சியை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறிகள் என்பன காணப்படாதுள்ளது.
- பொருத்தமற்ற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறப்புத் தேவையுள்ள நபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கைகள் குறைவாகவிருத்தல்
- தொழிற்கல்வித்துறையில் அடையாளம் காணப்பட்ட துறைகளில் (அதிக வேலை வாய்ப்புள்ள பகுதிகள்) வெற்றிடங்களை நிரப்பாமையானது தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை நேரடியாக எதிர்மறையாக பாதிக்கிறது
- நவீன தொழிநுட்பம் மற்றும் தொழிற்சாலை அநுபவம் என்பவற்றில் பயிற்றுவிப்பாளர்கள் தம்மை மேம்படுத்தாமை

அத்தியாயம் 06

மனிதவள விவரம்

6.1. ஆளணி முகாமைத்துவம்

வகை	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள் அல்லது மிகை
முதுநிலை	1315	586	729
மூன்றாம் நிலை	144	56	88
இரண்டாம் நிலை	1191	900	291
முதலாம் நிலை	1176	735	441
மொத்தம்	3826	2227	1599

6.1.1. திணைக்கள ஆளணியின் பொதுநிலை – 31.12.2022

வகை	அனுமதியளிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள்
கல்விசார்	1345	565	780
கல்விசாரா	2481	1662	819
மொத்தம்	3826	2227	1599

6.1.2 செயலாற்றுகை மீதான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள வெற்றிடங்களின் விளைவு

கல்வித்துறையில் ஆளணிப்பற்றாக்குறை ஏறத்தாழ 50 சதவீதமாக இருக்கின்றபோதிலும், தற்போதுள்ள வருகை அடிப்படையான ஆளணியைப் பாவித்து திணைக்களத்தின தலைமை அலுவலகத்தால் பயிற்சி வழங்கல் வேலைத்திட்டங்கள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெற்றிடமாகவுள்ள 135 கல்விசார் ஆளணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்த அத்தியாவசியமானதாக உள்ளது.

6.2. மனிதவள அபிவிருத்தியின் செயலாற்றுகை 2021

கோவிட் -19 காரணமாகத் திட்டமிட்டபடி இயலுமைவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தமுடியாமல் போயுள்ளது. உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை, பெரும்பாலும் நிகழ்நிலை பயன்முறையினூடாகவே நடாத்தக்கூடியதாயிருந்தது.

6.2.1 ஆளணியினரின் இயலுமை விருத்தி

இல	நிகழ்ச்சித்திட்டம்	பயிற்சி அலுவலர்	நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சித்திட்டதன்மை	விளைவு
				உள்நாடு	**வெளிநாடு**		
1	அரசகருமமொழிகள் திணைக்களம்- நாடளாவிய மொழிப் புலமைத் திட்டம் - சுற்றறிக்கை எண்-18/2020 (150 மணிநேரம்)	79	2022.05.09 - 2022.10.07	ரூபா. 112,500.00		உள்நாடு	மொழி திறன் மேம்படுத்துதல்
2	வேலை செய்யும் இடத்தில் உற்பத்தித்திறன் மற்றும் தரம் குறித்த பயிற்சித் திட்டம்	60	2022.03.16	உற்பத்தித்திறன் செயலகம்		உள்நாடு	அலுவலக சூழலை செயல்படுத்துதல்
3	கல்லூரித் தலைவர்களுக்கான நேர்மறை அணுகுமுறைகள் மற்றும் செயல்திறன் அடிப்படையிலான நிர்வாகத்தை மேம்படுத்துதல்	47	2022.10.26 - 2022.10.28	USAID ஆல் வழங்கப்பட்டது		உள்நாடு	அணுகுமுறைகளை மேம்படுத்துதல்
4	TVET நிர்வாகி பயிற்சி (ஆன்லைன்)	02	2022.03.28 - 2022.04.08		நிகழ்நிலை (ITEC)	உள்நாடு	திறன் கட்டிடம்
5	அலுமினியம் தயாரிப்பிற்கான TOT நிகழ்ச்சித் திட்டம் அலுமெக்ஸ் நிறுவனத்தால் (சிங்கள ஊடகம்)	07	2022.05.31	நிகழ்நிலை		உள்நாடு	திறன்களை மேம்படுத்துதல்
6	கைதடி மற்றும் காரைநகர் தொழிற்பயிற்சி அதிகாரசபையில் அலுமெக்ஸ் நிறுவனத்தால் (தமிழ் மீடியம்) அலுமினியம் தயாரிப்பதற்கான பயிற்றுனர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி	05	2022.09.16	Alumex ஆல் வழங்கப்பட்டது		உள்நாடு	
7	06 நாட்களுக்கு உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றத்திற்கான TOT திட்டம்	04	2022.07.07-08> 2022.07.14-15> 2022.07.21-22	நிகழ்நிலை		உள்நாடு	
8	KOICA மானியத் திட்டததின் கீழ் நிர்மாணக் கற்கைகளில் வேலைத்திறனை OJT வியூகத்தின் மேம்பாடு 1வது செயலமர்வு	20	2022.08.09		KOICA	உள்நாடு	கட்டுமானப் படிப்புகளுக்கான OJT உத்தியின் மேம்பாடு நடந்து வருகிறது
9	KOICA மானியத் திட்டததின் கீழ் நிர்மாணக் கற்கைகளில் வேலைத்திறனை OJT வியூகத்தின் மேம்பாடு 2வது செயலமர்வு	20	2022.09.15		KOICA	உள்நாடு	
10	KOICA திட்டத்தின் கீழ் கற்கை வழிகாட்டி மேம்பாடு குறித்த 1 வது செயலமர்வு (வரைவு மற்றும் வரைவு தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை பிளம்பிங்கிற்கானது)	17	2022.07.20		KOICA	உள்நாடு	தற்போதைய பாடத்திட்டங்களை திருத்துவதன் மூலம் ஆய்வு வழிகாட்டி தயாரித்தல்
11	KOICA திட்டத்தின் கீழ் கற்கை வழிகாட்டி மேம்பாடு குறித்த 2 வது செயலமர்வு	21	2022..08.17		KOICA	உள்நாடு	
12	OJT முறையை வலுப்படுத்துவதற்கான 07 நாட்கள் கொண்ட பயிற்றுனர்களுக்கான பயிற்சி	20	2022.10.13 - 21		KOICA ரூபா 1,045,000.00	உள்நாடு	
13	இலங்கை தொழிநுட்ப கல்விச் சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான திறன்விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்		2022 டிசம்பர் - 2023 சனவரி	ரூபா 480,555.56		உள்நாடு	திறன் மேம்படுதல்

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அது பற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன் மொழியும் சரியான நடவடிக்கையாது
1.	**பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் / வர்த்தக முற்பணக் கணக்குகள்	இணக்கமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.6	ஏனைய	இணக்கமானது		
02.	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்த போது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
03.	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	2004.05.11ம் திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல 171/2004 இன் படி, அரசு ஊதிய மென் பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
04.	**வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள் முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
05.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
06	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) டி.எம்.ஏ/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		

6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணக்கமானது		
07.	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	டி.எம்.ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது	02.கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களே நடைபெற்றன	கணக்காய்வு சுற்றுநிருபத்தை பின்பற்றுதல்
08.	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமற்றது		
8.2	மேற் கூறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம் பெற்றது	இணக்கமானது		
09.	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		

9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிகை இல. 216/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமற்றது	2022ல் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியால் பரிசோதனைகள் நடாத்தப்படவில்லை	2023 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைத் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10.	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீட்டு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமற்றது	ஒரு வருடத்திற்கு மேலான ரூபா. 148,835.37 பேரேட்டிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது	சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி.371 இன் அடிப்படையில தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணிநிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி.371 இன் படி அங்கிகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15.	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தி இருக்க வேண்டும்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணக்கமானது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16.	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல .	இணக்கமானது		
16.3	20.09.2017 திகதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல/ 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17.	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		

17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18.	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்	இணக்கமற்றது	கற்கை ஒன்று முன்னேற்றத்தில் உள்ளது	2021 இற்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24ம் திகதிய பொது நிர்வாகசுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற் கூறிப்பிடப்பட்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது		
19.3	மேற் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்திய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது		